**தலைப்பு 309 – கட்டடங்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழுள்ள ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன கட்டடங்கள் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 309 – கட்டடங்கள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கட்டடங்கள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் அட்டவணையில் பொழிப்பாக்கி தரப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தர் தமது கணக்களிப்பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம்** | **நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1 | செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை | 2.2.1 |
| | | 2 | எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை | 2.2.2 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும் | இணக்கமின்மைகள் | 2.7 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கி உள்ளன எனவும், | சொத்துக்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.3 |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிலுள்ள நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யாமை | 2.6 |
| 128(1)(ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்த்த சிக்கனம், விளைதிறன், ஒழுங்குமுறை, நேர்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையான கவனத்துடன் தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது (இங்கு, சிக்கனம் என்பதால் | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்துதல் | 2.5 |

| | | | |
|---|---|---|---|
| | கருதப்படுவது மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்வதல்ல, செலவிடப்பட்ட பணத்தின் மூலம் அரசிற்கு உயர்ந்த பெறுமதி கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்துததல்) | | |
| 128(1)(கூ) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன என்பதும், (கண்காணிக்கும் பொருட்டு போதியளவு ஒழுங்குவிதிகளை ஈடுபடுத்துதல் விசேடமாக அவரின் பொறுப்பாகும்) | கிரயம் அல்லது செயற்திறனின்றி சொத்துக்களைப் பயன்படுத்துதல் | 2.3(ஈ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்

(அ) அரசாங்க திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரசாங்க அமைச்சுக்களுக்காக கட்டிடங்கள் மற்றும் ஏனைய சேவைகளுக்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்தல், மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் நிர்மாணித்தல்.

(ஆ) கட்டிடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக அரசாங்க நிறுவனங்களுக்கு ஆலோசனை சேவைகளையும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளையும் வழங்குதல்.

(இ) அரசாங்க திணைக்களம் மற்றும் அமைச்சுக்களின் கட்டிட பராமரிப்பு நடவடிக்கைகளை புதிதாக சேர்த்தல் மற்றும் மேம்படுத்துதல் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

(ஈ) இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களுக்காக கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

## 2.2 செயலாற்றல்

### 2.2.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளாகக் காட்டப்பட்டிருந்த இலங்கை வெளிநாட்டு தூதரங்களுக்காக கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் காட்டப்பட்டிருந்தும் திணைக்களத்தினால் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை

திணைக்களத்தினால் செய்யப்படுகின்ற அனைத்து ஒப்பந்தங்களும் உப ஒப்பந்த முறைமையில் செய்வதற்காக பல்வேறு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. திணைக்களத்தில் 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,847.92 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமான 142 Turnkey நிர்மாண ஒப்பந்த செயற்திட்டங்கள் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவை அனைத்தும் உப ஒப்பந்த முறைமையில் நிறைவேற்றப்பட்டிருந்தன. இச்செயற்திட்டங்களுக்கு மத்தியில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் செயற்பாடுகளை பூர்த்திசெய்யப்பட வேண்டிய 57.56 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமான 11 செயற்திட்டங்கள் எதுவித செயற்பாட்டையும் நிறைவேற்றியிருக்கவில்லை. ரூபா 287.27 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமான 11 செயற்திட்டங்களின் செயலாற்றல் 10 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் வரையான வீச்சுடைய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

திணைக்களத்திற்குச் சொந்தமான டொறிங்டனில் அமைந்துள்ள கட்டிடம் வெளிவிவகார அமைச்சிற்கு ஒரு பூரணப்படுத்தப்படாத உடன்படிக்கையின் மூலம் 2016 மே மாதம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பீடு முறைப்படியாக இடம்பெற்றிருக்காமையின் காரணமாக வாடகையை அறவீடு செய்ய முடியாதிருந்தது.

### (ஆ) ஒப்படைக்கப்படாத சொத்துக்கள் முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

கட்டிடங்கள் திணைக்களத்தின் பல்வேறு பிரதேசங்களில் அமைந்துள்ள அலுவலகங்களின் உத்தியோகபூர்வ இல்லங்களையும் சுற்றுலா விடுதிகளையும் பேணுகின்ற 40 காணித்துண்டுகளுக்கு மத்தியில் 30 காணித்துண்டுகளின் உரிமை கட்டிடத் திணைக்களத்திற்கு உரியது அல்ல என இனங்காணப்பட்டிருந்ததுடன் உரிமை திணைக்களத்திற்குரியது என இனங்காணப்பட்ட 04 காணிகள் சம்பந்தமாக உறுதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (இ) வங்கி கணக்கு செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்

திணைக்களத்தினால் தேசிய சேமிப்பு வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 781,035 மீதியுடனான 419 பிணை வைப்பு மற்றும் நானாவித வைப்புக் கணக்குகள் நீண்டகாலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டன.

### (ஈ) வாகனங்கள் விற்றுத் தீர்க்கப்படாமை

2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு தடவை விற்றுத்தீர்க்கப்பட வேண்டிய வாகனங்கள் இனங்காணப்பட்டு வாகனங்களை விற்றுத்தீர்த்தல் நடைமுறை

மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பாவனையிலிருந்து நீக்கப்பட்டு ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த 02 வாகனங்கள் சம்பந்தமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ்வாறு நடவடிக்கை எடுத்தல் தாமதமடைந்திருந்தது.

### 2.4 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| 2013 | மீண்டுவருபவை | 239.32 | 229.66 | 9.66 | 4.04 |
| | மூலதனம் | 42.99 | 25.36 | 17.63 | 41.01 |
| | **மொத்தம்** | **282.31** | **255.02** | **27.29** | **9.67** |
| 2014 | மீண்டுவருபவை | 250.05 | 248.07 | 1.98 | 0.79 |
| | மூலதனம் | 48.56 | 48.47 | 0.09 | 0.19 |
| | **மொத்தம்** | **298.61** | **296.54** | **2.07** | **0.69** |
| 2015 | மீண்டுவருபவை | 292.90 | 286.73 | 6.17 | 2.11 |
| | மூலதனம் | 52.40 | 52.23 | 0.17 | 0.32 |
| | **மொத்தம்** | **345.30** | **338.96** | **6.34** | **1.84** |
| 2016 | மீண்டுவருபவை | 315.54 | 308.99 | 6.55 | 2.08 |
| | மூலதனம் | 37.50 | 36.37 | 1.13 | 3.01 |
| | **மொத்தம்** | **353.04** | **345.36** | **7.68** | **2.18** |
| 2017 | மீண்டுவருபவை | 316.24 | 316.06 | 0.18 | 0.61 |
| | மூலதனம் | 39.90 | 38.91 | 0.99 | 2.48 |
| | மொத்தம் | 356.14 | 354.97 | 1.17 | 0.33 |

### 2.5 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

நிர்மாணச் செயற்பாடுகளுக்காக ஏனைய 13 அமைச்சுக்கள் மற்றும் 11 திணைக்களங்களினால் ரூபா 2,204.67 மில்லியன் மொத்த தொகையான நிதிஏற்பாடு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 1,189.17 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 1,015.50 மில்லியன் அல்லது 46.06 சதவீதமான நிதிஏற்பாடு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்தது.

**2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30901 ஆம் விடய இலக்கம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 26.00 | 25.44 | 13.50 | 14.86 | 90.00 | 58.15 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மரணமடைந்த உத்தியோகத்தர்களின் ரூபா 145,850 கடன் மீதி ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டதுடன் அதனை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 சனவரி 01 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ திணைக்கள சுற்றறிக்கையின் 06(i), (ii) மற்றும் 07 ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டு இறுதியில் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் காலாண்டில் புதிதாகச் சேர்க்கப்பட்ட வாகனம், வாகனங்களை விற்றுத் தீர்த்தல், வாகனங்களை பரிமாற்றம் செய்தல் என்பவற்றை உள்ளடக்கும் ஏனைய மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டியதுடன் மாற்றங்கள் இல்லாதிருந்தால் வெற்று அறிக்கையேனும் அனுப்பி வைக்க வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணயினரும் உள்ளபடியான பதவியணியினரும்

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 124 | 81 | 43 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 24 | 4 | 20 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 285 | 231 | 54 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 178 | 159 | 19 | - |
| (v) | ஏனையவை (ஒப்பந்த அடிப்படை) | - | 20 | - | 20 |
| | மொத்தம் | 611 | 495 | 136 | 20 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 136 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் இன்றுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) திணைக்களத்தின் செயலாற்றலுக்கு நேரடியாகத் தாக்கம் ஏற்படுத்துகின்ற மேலதிக பணிப்பாளர் (ஆலோசனை சேவை) பதவி 2016 ஒக்தோபர் மாதத்திலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது.